

பெரம்பலூர் மாவட்டம் துறைமங்கலம் குழந்தைகள் நல மையத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணிகள் துறையின் சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் "ஊட்டச்சத்தை உறுதி செய் இரண்டாம் கட்ட திட்டத்தின் கீழ் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார் . இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நாகூர் தர்கா கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு

## 45 கிலோ சந்தனக் கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ.21-**

**நாகூர் தர்கா கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு 45 கிலோ சந்தனக் கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு :-

நாகூர் தர்காவில் ஆண்டுதோறும் நடைபெறும் கந்தூரி திருவிழாவிற்கு, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கோரிக்கையினை ஏற்று தமிழ்நாடு அரசு வனத்துறையில் இருப்பில் உள்ள சந்தனக்கட்டைகளை நாகூர் தர்காவிற்கு கட்டணமின்றி வழங்கி வருகின்றது.

அதன்படி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2024) முகாம் அலுவலகத்தில், இந்த ஆண்டிற்கான நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக் கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக் கட்டைகளை கட்டண மின்றி வழங்குவதற்கான அரசாணையினை நாகூர் தர்கா தலைமை நிருவாக அறங்காவலர் சையது முகமது காஜி ஹூசைன் சாஹிப் மற்றும் நாகூர் தர்கா ஆலோசனைக் குழுத் தலைவர் சையது முகமது கலீபா சாஹிப் ஆகியோரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சா.விஜயராஜ் குமார், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ரா. ரெட்டி, மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் ஏ.எச். நஜிமுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை - பாரிமுனை காளிகாம்பாள் திருக்கோயிலின்

## புதிய வெள்ளித் தேருக்கு - கூடுதலாக 90 கிலோ வெள்ளிக் கட்டிகள்!

### இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, நவ.21-

காளிகாம்பாள் திருக்கோயிலுக்கு புதிய வெள்ளித்தேருக்கு கூடுதலாக 90 கிலோ வெள்ளிக் கட்டிகளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

அதன் விவரம் வருமாறு :

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (19.11.2024) சென்னை, பாரிமுனை, காளிகாம்பாள் திருக்கோயிலில் புதிய வெள்ளித்தேர் செய்திட வெள்ளித் தகடு வேயும் பணிகளுக்கு உபயதாரரால் வழங்கப்பட்ட 90 கிலோ வெள்ளிக் கட்டிகளை திருக்கோயில் நிர்வாகத்திடம் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பின், இந்து சமய அறநிலையத் துறையில் ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கின்ற 68 தங்கத்தேர்கள் மற்றும் 55 வெள்ளித்தேர்களில் 15க்கு மேற்பட்ட திருக்கோயில்களில் செயலற்று இருந்த வெள்ளி மற்றும் தங்கத் திருத்தேர்களை ஓட வைத்த பெருமை திராவிட மாடல் அரசையே சேரும். 11 ஆண்டுகள் ஓடாமல் இருந்த இராமேஸ்வரம் தங்கத்தேர், 10 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சமயபுரம் தங்கத்தேர், 9 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சேலம், கோட்டை மாரியம்மன் தங்கத் தேர், 5 ஆண்டுகள் ஓடாமல் இருந்த திருத்தணி தங்கத்தேர் போன்றவற்றை பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் உலா வரச் செய்துள்ளோம்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப் பேற்றபின், ரூ.29 கோடி மதிப்பீட்டில் 5 தங்கத்தேர்கள் மற்றும் ரூ.27.16 கோடி மதிப்பீட்டில் 9 வெள்ளித்தேர்கள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் பெரியபாளையம் தங்கத்தேர் மற்றும் திருத்தணி வெள்ளித்தேர் நிறைவுபெற்று பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் பயன்பாட்டில் உள்ளது. இதர வெள்ளித்தேர்களில் அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயில் வெள்ளித்தேரும் ஒன்றாகும். இத்தேர் செய்திட ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டு ரூ.12 லட்சம் செலவில் மரத்தேர் பணிகள் நிறைவுபெற்றுள்ளது. இந்த மரத்தேருக்கு வெள்ளித்தகடு வேயும் பணிக்கு 277 கிலோ 530 கிராம் அளவுள்ள வெள்ளி தேவைப்படுகிறது. அதில் கடந்த 02.08.2024 அன்று திருக்கோயில் மற்றும் உபயதாரர் மூலம் 133 கிலோ வெள்ளிக் கட்டிகள் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன. இன்றைய தினம் 90 கிலோ வெள்ளிக் கட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இந்த வெள்ளித் தேருக்கு தேவைப்படும் வெள்ளிக் கட்டிகளை வழங்குவதற்கு உபயதாரர்கள் தயாராக இருக்கின்றார்கள். இந்த புதிய வெள்ளித் தேரின் பணிகள் முழுமையாக நிறைவுற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மார்ச் 1 அன்று பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் ஒப்படைக்கப்படும்.

திருச்செந்தூர் திருக்கோயில் யானை தாக்கி இருவர் உயிரிழந்த சம்பவம் குறித்த செய்தி அறிந்தவுடன் முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட இரு குடும்பத்தினரையும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறி பேசச் சொல்லி இருந்தார்.

உடனடியாக அத்திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர் அருள்முருகன் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். இது எதிர்பாராத ஒரு சம்பவமாகும். திருக்கோயில் யானை கூட அவர்கள் இறந்த பிறகு அவர்களைப் பார்த்து அழுததும், அவர்களது உடலை பார்த்து தட்டித் தட்டி எழுப்பியதும் காண்பவர்களை மனதினை கலங்க செய்த நிகழ்வை அனைவரும் அறிவீர்கள். சிறிய அளவில் ஏற்பட்ட சினத்தால் இந்த நிகழ்வு நடந்ததாக அந்த இடத்தில் பதிவான சி.சி.டி.வி. காட்சிகளைப் பார்த்த போது தெரிய வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை 11 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 4, 7 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 21/11/2024 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | 4 | பாப்பிரெட்டிப்பட்டி | மணி மஹால், பொம்மிடி, தருமபுரி. |
| | காலை 9.00 மணி | 7 | கும்பகோணம் | ராயாஸ் கிராண்ட், முதல் தளம், மகாமக குளம் எதிரில், கும்பகோணம். |
| | மாலை 4.00 மணி | | திருவிடைமருதூர் | கலைஞர் பாசறை, பிரதான சாலை, திருவிடைமருதூர். |
| 22/11/2024 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | 4 | பாலக்கோடு | பி.எம்.குப்புசாமி ராஜம்மாள் திருமண மண்டபம், பெரியாம்பட்டி, தருமபுரி. |
| | மதியம் 2.30 மணி | | அரூர் | கொங்கு வேளாளர் திருமண மண்டபம், அரூர், தருமபுரி. |
| 23/11/2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 7 | வேதாரண்யம் | சிம்பு மீரா திருமண மஹால், நாகை சாலை, வேதாரண்யம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-11-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### தஞ்சையில்

## விளையாட்டு விடுதி மாணவர்களுக்கு 'சாம்பியன் கிட்' வழங்கும் நிகழ்ச்சி!

### அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் நடைபெற்றது!

தஞ்சை, நவ.21-

தஞ்சாவூர் அன்னை சத்யா உள் விளையாட்டு அரங்கத்தில் 2024-2025-ஆம் ஆண்டிற்கு விளையாட்டு விடுதி மாணவர்களுக்கு சாம்பியன் கிட் வழங்கும் நிகழ்ச்சி உயர் கல்வி துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் தலைமையில் நடைபெற்றது.

தஞ்சாவூர் அன்னை சத்யா உள் விளையாட்டு அரங்கத்தில் 2024-2025-ஆம் ஆண்டிற்கு விளையாட்டு விடுதி மாணவர்களுக்கு சாம்பியன் கிட் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் முன்னிலை யில் நேற்று முன்தினம் (19.11.2024) வழங்கினார்.

2024-2025-ஆம் ஆண்டிற்கு விளையாட்டு விடுதி மாணவ/மாணவியர்கள் பயன்பெறும் வகையில் தலா ரூ.3306 வீதம் 2600 மாணவ/ மாணவியர்களுக்கு மொத்தம் ரூ.85,95,600க்கு சாம்பின் கிட் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் 11.11.2024 அன்று வழங்கப்பட்டது.

மேலும், தற்போது தஞ்சாவூர் விளையாட்டு விடுதி மாணவர்களுக்கு சேம்பியன் கிட் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.3306 வீதம் 63 மாணவர்களுக்கு ரூ.2,08,278 க்கு சாம்பின் கிட் உயர்கல்வி அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் நேற்று மாணவர்களுக்கு வழங்கி வாழ்த்தி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன், மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், உதவி 'ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர். உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்ட விளையாட்டு அலுவலர் ஜெ. டேவிட் டானியல், சதய விழா குழுத் தலைவர் து.செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 25.11.2024 அன்று கடலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிந்து, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், திருப்பாதிரிப்புலியூர் புனித வளனார் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, மாநகராட்சி ஆணையாளர் மரு.எஸ்.அனு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி இரா.சரண்யா உட்பட பலர் உள்ளனர்.



மதுரை மடீசியாவில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மண்டல இணைப்பதிவாளர் குருமூர்த்தி, மாவட்ட ஊராட்சி சேர்மன் சூரியகலா கலாநிதி, மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி மற்றும் அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பயனாளிகள் உள்ளனர்.